| O.S.No. 152/2024 | PW:1 திரு.ரவி த/பெ. திரு.கல்யாணவரதன் | 27-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) நான் தற்போது வாலாஜாபாத்தில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணி செய்கிறேன். நான் பி.எஸ்சி கணிதம் படித்துள்ளேன். 1, 2, 6 பிரதிவாதிகள் என் உடன் பிறந்த சகோதரர்கள். மற்ற பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள். எங்களது தந்தை பெயர் கல்யாண வரதன். வழக்கு சொத்துக்கள் எனது பாட்டானார் வெங்கடாஜலப்பிள்ளைக்கு சொந்தமான சொத்துக்களாகும். வழக்கில் அல்லாத பிற சொத்துக்களும் வெங்கடாஜலப்பிள்ளைக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். வெங்கடாஜலப்பிள்ளை 23.05.1980ல் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதனை படித்துப்பார்த்தேன்.

2) அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எ ஷெட்யூல் சொத்தினை வெங்கடாஜலப்பிள்ளை காலம் வரையில் அனுபவிக்கவேண்டும் என்றும், அவருக்கு பிறகு அந்த சொத்துக்கள் அவருடைய இளைய மகன் கல்யாணவரதனுக்கு அடைய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பி ஷெட்யூல் சொத்தினை அவரது மூத்த பிள்ளை அப்புபிள்ளை காலம் வரையில் அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு கல்யாண வரதனின் ஆண் வாரிசுகள் அடைய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சி ஷெட்யூல் சொத்தினை எனது தந்தை கல்யாண வரதன் முழு உரிமையுடன் அடைய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் முறையாக ஆச்சாரத்திற்கு வந்தது.

3) ஏ ஷெட்யூல் சொத்தினை எனது பாட்டனார் வெங்கடாஜலப்பிள்ளை அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு எனது தந்தை கல்யாண வரதன் அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பி ஷெட்யூல் சொத்தினை அப்புப்பிள்ளை அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு கல்யாணவரதனின் ஆண் வாரிசுகளான நாங்கள் அடைந்து அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். சி ஷெட்யூல் சொத்தினை எனது தந்தை கல்யான வரதன் முழு உரிமையுடன் அனுபவித்து வந்தார். எனது தந்தை கல்யாண வரதன் 2007ம் ஆண்டு இறந்தார். அப்புபிள்ளைக்கு நேரடியான வாரிசுகள் யாரும் இல்லை. அப்புபிள்ளைக்கு நேரடியான வாரிசு இல்லை என்பதால் பி ஷெட்யூல் சொத்துக்களுக்கு மேற்படி நிபந்தனை எழுதப்பட்டது என்றால் சரிதான்.

4) அப்புபிள்ளையின் சொத்தில் எனக்கு 4ல் 1 பாகம் உரிமையுள்ளது. எனது 4ல் 1 பாகம் மற்றும் 2ம் பிரதிவாதி ராம்மோகனின் 4ல் 1 பாகத்தினை நாங்கள் இருவரும் சேர்ந்து 7ம் பிரதிவாதி மாதவிக்கு 27.07.2016 ல் கிரையம் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். 7ம் பிரதிவாதி எங்களிடம் கிரையம் வாங்கி சொத்தினை எனது சகோதரரான 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையினை படித்துப்பார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் மேற்படி விஷயத்தை சொல்லியுள்ளார் என்றால் அது ஞாபகத்தில் இல்லை. என் தகப்பனார் உயிருடன் இருந்தபோது அவர் தான் எங்கள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

5) 5, 7 பிரதிவாதிகள் மற்றும் எனது திருமணங்களை 6ம் பிரதிவாதிதான் செலவு செய்து செய்துவைத்தார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் DME வரை நான் படிக்க வைத்தேன். அதற்கு மேல் அவர் என்ன படித்தார் என்று எனக்கு தெரியாது. 20 வயதிலிருந்தே 6ம் பிரதிவாதி வேலைக்கு செல்கிறார் என்றால் இல்லை 21 அல்லது 22 வயதிலிருந்து வேலைக்கு செல்கிறார். நான் எந்த வேலையும் செய்யாமல் வீட்டில் தான் இருப்பேன் என்றால் அது பொய். நான் குடும்பத்தில் பொறுப்பான ஆள் இல்லை என்று சொன்னால் அது பொய்யாகும். 6ம் பிரதிவாதியை நான் படிக்க வைத்து வேலை வாங்கி கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

6) என் தந்தை உயிருடன் இருந்த காலம் வரையில் 6ம் பிரதிவாதிதான் எனது தந்தையுடன் இருந்து குடும்ப பொறுப்புகளை பார்த்து வந்தார் என்று சொன்னால் இல்லை. என் தந்தை யார் யாரிடம் கடன் வாங்கியிருந்தார் என்ற விஷயம் எனக்கு தெரியும். அந்த கடன்கள் குடும்ப நிர்வாகத்திற்காகவும், பெண்களின் திருமண செவுக்காகவும் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தந்தை அன்னை பைனான்ஸ் மோகன சுந்தரத்திடம் ரூ.30,000/- டாக்டர் ஞான பிரகாஷத்திடம் ரூ.20,000/- கடன் வாங்கியிருந்தார். மணி என்பவரிடம் என் தந்தை ரூ.20,000/- கடன் வாங்கியிருந்தார். அதனை என் தந்தையே திருப்பி செலுத்திவிட்டார். அதேபோல் பச்சையப்ப கவுண்டர் மகன் மனோகரனிடம் ரூ.16,000/- கடன் வாங்கியிருந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பாண்டில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையின் கையெழுத்தா என்றால் என்

தந்தையின் கையெழுத்துதான் ஆனால் அந்த கடனை எனது தந்தை பைசல் செய்து விட்டார்.

7) என் தந்தை பச்சையப்ப குமாரர் மணி என்பவரிடம் ரூ.15000/- கடன் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கடன்களை எனது தந்தை பைசல் செய்யவில்லை என்றாலும், 6ம் பிரதிவாதி தான் பைசல் செய்தார் என்றால் அது பொய்யாகும். அந்த அண்டிபாண்டுகளில் 6ம் பிரதிவாதிதான் கடன்களை பைசல் செய்ததாக மேற்குறிப்பு எழுதியுள்ளார்கள் என்றால் தெரியாது. நான் குடும்பத்தில் பொறுப்பில்லாமல் இருந்ததால் 6ம் பிரதிவாதிதான் எனது தந்தையின் கடன்களை பைசல் செய்தார் என்றால் அது பொய்யாகும். குடும்பத்திற்காக தனது தந்தை கோவிந்த ராஜ கவுண்டர் குமாரர் வேதபுரியிடம் 6ம் பிரதிவாதி சொத்தினை அடமானம் வைத்து கடனை வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தகப்பனார் வாங்கி கடனை பைசல் செய்வதற்காகத்தான் 6ம் பிரதிவாதி அடமானம் போட்டு கடன் வாங்கினார் என்று சொன்னால் அது பொய்யாகும்.

8) என் தாத்தா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் படி எ மற்றும் சி ஷெட்யூல் சொத்துக்களில் பாகம் கோரி இவ்வழக்கினை போட்டுள்ளேன். எனது தந்தை சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டு இவ்வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 19.02.1993 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 19.02.2004 தேதியிட்ட உயில்சாசனம் பற்றி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என் தந்தைக்கும், பெரியப்பாவிற்கும் அ.வ.எண்.344/1989 வழக்கிற்கான மேல்முறையீடு நிலுவையிலிருந்தபோது அந்த ஆவணங்கள்

ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி எதிர்வழக்குரையினை படித்துப்பார்த்த பிறகு மேற்படி ஆவணங்களை நகல் போட்டு படித்துப்பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. அந்த ஆவணங்களை பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணங்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதால் நகல் போட்டு பார்க்கவில்லை.

9) 19.02.1993 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தினை என் தந்தை 6ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு 6ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்துக்களில் ஒரு சில சொத்தினை அன்னை பைனான்ஸில் என் தகப்பனார் வாங்கிய கடனுக்காக அன்னை பைனாஸ் நிறுவனத்தின் உரிமையாளர் மோகன சுந்தரத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 19.02.2004 தேதியிட்ட உயில்சாசனத்தை எனது தந்தை 6ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்தார் என்றாலும், எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு அந்த உயில்சாசனம் நடைமுறைக்கு வந்து அதில் கண்ட சொத்துக்களை 6ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. அதேபோல் அந்த உயில்சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களில் சில சொத்துக்களை 6ம் பிரதிவாதி விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் தகப்பனார் உயில்சாசனம் எழுதிவைத்த நாளிலிருந்து 3 ஆண்டுகாலம் வரை உயிருடன் இருந்தார் என்று சொன்னால் சரிதான். எனது தந்தை கடைசிகாலம் வரை நல்ல உடல்நலம் மற்றும் மனநிலையில் இருந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களுக்கான பட்டா சிட்டா உள்ளிட்ட ஆவணங்கள் 6ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

10) எனது தந்தை எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் உயில்சாசனம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதேபோல் 6ம் பிரதிவாதி எனது தந்தை வாங்கிய கடனை பைசல் செய்த விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 6ம் பிரதிவாதி குடும்பத்திற்காக இதுவரையில் ரூ.6,00,000/- வரை செலவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித பாகஉரிமையும் இல்லை என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை பொதுவில் நான் அனுபவித்து வரவில்லை என்றாலும், 6ம் பிரதிவாதி மட்டுமே தனிமையில் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.27 19:09:23 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**